போடுவது மூலமாக உடையார்பாளையம் பேரூராட்சிக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான வரைவுத் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வரப்பெற்றுள்ளது. பெரும்பாலும் இந்த அளவிலே ஏற்கப்பட்டிருக்குமென்று எதிர்பார்க்கிறேன்.

Opening of Civil Supplies Model Shop in Mayuram

* 16 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that representation has been received by the Government during the month of May, 1975, from the public of Mayuram requesting them to open a Civil Supplies Model Shop there, for effective distribution of essential commodities to the public ; and

(*b*) if so, the action taken thereon ?

மாயூரத்தில் பொருள் வழங்கு துறையின் மாதிரி விற்பனை நிலையம் திறத்தல்.

திரு ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பொதுமக்களுக்கு இன்றியமையாப் பொருட்களைத் திறம்படப் பகிர்ந்தளிப்பதற்காக உணவுப் பொருள் வழங்கு துறையின் மாதிரி விற்பனை நிலையம் ஒன்றினைத் திறக்க வேண்டுமென்று வேண்டி 1975–ஆம் ஆண்டு மே திங்களில் மாயூரம் பொதுமக்களிடமிருந்து முறையீடு ஏதும் அரசுக்கு வந்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

The Hon. Thiru S. MADHAVAN : (*a*) Yes.

(*b*) The family vards in ward No. 7, Mayuram town, were detached from Mayuram Co-operative- Wholesale Store Branch on 7th June 1975 and attached to the existing model shop at Thiru-vilandur.

THIRU G. SWAMINATHAN : May I know the reason why such a request was made by the public of Mayuram to open a Civil Supplies Model Shop, while there is a wholesale co-operative store ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கூட்டுறவு நிறுவனத்திலிருந்து சரியாக எங்களுக்குப் பொருள்கள் கிடைக்க வில்லை என்றும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுடன் அதை இணைக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டிருந்தார்கள். எனவே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

1975 அக்டோபர் 25]

THIRU D. SANTOSHAM : Mr. Deputy Chairman, Sir, these Model Shops, instead of being good models, sometimes also turn out to be bad models. May I know what are the steps taken by the Government to ensure that they are good examples and not bad models ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் முதலிடம் கூட்டுறவுக் கடைகளுக்குக் கொடுக்கிறோம். நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், மாதிரிக் கடைகள் என்ற முறையில் வைப்பதற்கு சில இடங்களில் நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். பெரும்பாலும் கூட்டுறவுக் கடைகளை ஊக்குவிப்பதுதான நல்லது. அது சரியான முறையில் நடைபெற வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. இங்கே கூட்டுறவுக் கடைகள மீது புகார் செய்து, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடை வேண்டுமென்று கேட்கிறார்கள். இது ஆங்காங்கேயுள்ள நிர்வாகத்தைப பொருத்திருக்கிறது.

Pilot Cement Plant at Muruvathur Village, Lalgudi Taluk

* 17. *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the Pilot Cement Plant at Muruvathur Village, Lalgudi Taluk, Tiruchirappalli District.

லால்குடி தாலுக்கா, முருவத்தூர் கிராமத்தில் உள்ள முன் மாதிரியான சிமெண்ட் ஆலை (Pilot Cement Plant).

திரு. எல். பலராமன் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப பதிலளிக்க வேண்டுகிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தாலுக்கா, முருவத்தூர கிராமத்தில் உள்ள முன் மாதிரியான சிமெண்ட் ஆலை (Pilot Cement Plant) தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முருவத்தூரிலுள்ள முன்னோடி சிமெண்ட் இயந்திரத் தொழிற்சாலையை தென் பகுதியில் ஒரு சிமெண்ட் ஆராய்ச்சி நிலையமாகச் செயல்படுத்துவதற்காக இந்திய சிமெண்ட் ஆராய்ச்சி நிலையத்திற்கு 6—6—74 அன்று நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினா 18 ஒத்தி வைக்கப்படுகிறது.